25th January 1972]

(இ) நாளது தேதியன்றுள்ளபடி, பணி முறைப்படுத்தப் படாத அத்தகைய ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) நாற்பத்தைந்து.

(இ) இருபத்தெட்டு.

(உ) இந்த இருபத்தெட்டு தொழிற்பயிற்சியாசிரியர்களின் கல்வித் தகுதிகள் இப்போதுள்ள விதிகளுக்கிணங்க இல்லையாதலால் அவர்களது பணிகளை முறைப்படுத்த முடியவில்லை. இருந்த போதிலும் வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநரிடமிருந்து செயற்குறிப்புகள் வரப்பெற்றதும் அவர்களுக்குச் சாதகமாகத் தொடர்புடைய விதிகளைத் தளர்த்தி அவர்களுடைய பணிகள் முறைப்படுத்தப்படும்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவரவர்களே, இந்த தேசிய தொழில் பயிலுநர் சான்றிதழ் பெற்றவர்களுக்கு விசேஷச் சலுகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். அப்படியிருக்க, இவர்களை நியமனம் செய்வதில் என் காலதாமதம் ஏற்பட வேண்டும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்தப் போஸ்டுக்குள்ள தகுதியிலிருந்து வேறுபட்ட தகுதி பெற்றிருக்கிறார்கள் இவர்கள். அதாவது, நேஷனல் அப்பிரெண்டிஸ் செர்டிபிகேட். அவசரத் தேவைக்காக 1966-67-ல் 45 பேர்களைப் போட்டார்கள். இருக்கிற விதிகளைத் தளர்த்தித்தான் அவர்களை 'ரெகுலரைஸ்' செய்ய முடியும். அப்படி 17 பேர்களுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. மீதிப் பேர்களுக்கு 'ப்ரபோஸல்' அனுப்பும்படி, டைரக்டர் ஆஃப் எம்ப்ளாய்மெண்ட் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

Tamil Nadu Cement Factory, Alankulam

* 31. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether any preference in providing employment is given to those farmers who have lost their lands due to acquisition of the lands for the Tamil Nadu Cement Factory, Alankulam; and

(*b*) if so, the number of such persons recruited so far?

தமிழ்நாடு சிமின்ட் தொழிற்சாலை, ஆலங்குளம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஆலங்குளம் தமிழ்நாடு சிமின்ட் தொழிற்சாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்த காரணத்தால் நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு அத்தொழிற்சாலையில் வேலையளிப்பதில் சலுகை காட்டப்படுகிறதா?

[25th January 1972

(இ) ஆமெனில், இதுவரை எத்தனை பேர் அம்மாதிரி வேலையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 172 பேர்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, அண்மையில் வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள் நிலங்கள் கொடுத்தவர்களுடைய குடும்பங்களிலிருந்து எடுக்கப்படாமல், வெகுதூரத்திலிருந்து வந்தவர்கள் எடுக்கப்பட்டிருப்பதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஏதாவது பிரச்சாரம் நடைபெறுகிறதா என்று எனக்குத் தெரியாது. என்னிடமுள்ள தகவலின்படி 933 பேர்களை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். அண்மையில் மஸ்தூர் என்ற முறையில் 543 பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 172 பேர்கள் நிலத்தை விட்டுக் கொடுத்தவர்கள். வேலை வாய்ப்புகள் வரும்போது நிலத்தை இழந்தவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது, முதலிடம் ஷெட்யூல்டு காஸ்ட், ஷெட்யூல்டு டிரைப், இரண்டாவது இடம் லாண்ட்லெஸ் அக்ரிகல்சுரல் லேபரர் என்று போட்டு அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

Ground water Exploration

*32. Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether the Union Government have undertaken the ground water exploration in Thanjavur District : and

(b) if so, the details thereof.

நில நீர் ஆய்வுப் பணி

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் மத்திய அரசு நிலநீர் ஆய்வுப் பணி மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சோதனைக்குழாய் கிணறு அமைப்பு என்று அழைக்கப்பட்ட இந்திய அரசின் விவசாயத்துறையிலுள்ள மத்திய நிலநீர் வாரியம் துளையிடும் வேலைகளை இரு கட்டங்களாக மேற்கொண்டு, முதல் கட்டம் 1957-58-லும் இரண்டாவது கட்டம் 1969-71-லும்மாக தஞ்சை மாவட்டத்தில் நடத்தி இருக்கிறது. முதல் கட்டத்தில்